# பாடத்திட்டம் - *கர்நாடக சங்கீதம்*

சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையம்

நோர்வே 01.10.2019

இப்பாடத்திட்டமானது நோர்வேவாழ் நோர்வேவாழ் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, சுரத்தட்டு கலைஞர்களால் நெறிப்படுத்தப்பட்டு தொகுக்கப்பட்டது. இத்திட்டம் எட்டுத் தரங்களாக பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் (2010) பின்வருவோரினால் நோர்வே நுண்கலை மன்றத்திற்காக தொகுக்கப்பட்ட பாடத்திட்டமானது, 2019 இல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தின் (International Tamil Fine Arts Innovation Center – ITAC) அடைவுத்திட்ட ஆக்கத்தேவைக்கமைய ஆசிரியர் குழுவொன்றினால் இப்பாடவிதானம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பாடத்திட்ட உருவாக்கம் 2010**

***ஆசிரியர்கள்:***

- சங்கீத வித்துவான், சங்கீத கலா வித்தகர், திருமுறைப் பண்ணிசைமணி திருமதி. குணபூஷணம் மல்லிகா நாகராசா அதிபர், நல்லை முருகன் இசைத்தமிழ் மன்றம்
- இசைக்கலைமணி திருமதி. சிவமலர் மனோகரன் அதிபர், சுருதிஸ்வ்ரலயா
- சங்கீத வித்துவான் திருமதி. வாசுகி ஜெயபாலன் அதிபர், Oslo Fine Arts Academy ஆசிரியர், Oslo musikk- og kulturskole
- இசைக் கலாவித்தகர் செல்வி. பாலநாயகி பாலசுப்பிரமணியம் அதிபர், சப்தஸ்வரா இசைமன்றம்
- சங்கீத கலா வித்தகர் திருமதி. வாசுகி ரங்கன் ஆசிரியர், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்
- சங்கீத வித்துவான் திரு ரி. வி. விநாயகமூர்த்தி ஆசிரியர், முத்தமிழ் அறிவாலயம், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்
- சங்கீத வித்துவான் திரு ரி. வி. விநாயகமூர்த்தி ஆசிரியர், முத்தமிழ் அறிவாலயம், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

***நிபுணத்துவ ஆலோசனை (இலங்கை):***

இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர் (வாய்ப்பாட்டு, வயலின்) பண்ணிசைக்கலா வித்தகர்

செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (அழகியல்),

கல்விப் பின் படிப்பு டிப்புளோமா, விஷேட பயிற்சி சங்கீதம்,

**2019 மீளாய்வுக்குழுவில் பங்கெடுத்தோர்:**

- முனைவர் சுயம்பு ஹரிஹரன்
  சங்கீத வித்துவான், சங்கீத கலா வித்தகர், திருமுறைப் பண்ணிசைமணி

- திருமதி. குணபூஷணம் மல்லிகா நாகராசா
  அதிபர், நல்லை முருகன் இசைத்தமிழ் மன்றம்

- இசைக்கலைமணி திருமதி. சிவமலர் மனோகரன்
  அதிபர், சுருதிஸ்வரலயா கலைக்கூடம்

- இசைக் கலாவித்தகர் செல்வி. பாலநாயகி பாலசுப்பிரமணியம்
  அதிபர், சப்தஸ்வரா இசைமன்றம்

- இசைக்கலைமணி ஷகிலா ரமேஷ்

- இசைக்கலைமணி சுஜாதா கலாராஜன்

- சங்கீத கலா வித்தகர் திருமதி. வாசுகி ரங்கன்
  ஆசிரியர், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

## தரம் ஒன்று:

### செயன் முறை

- ஸ்வர வரிசைகள் - 12 (மூன்று காலங்களில்)
- ஜண்டை வரிசைகள் - 06 (மூன்று காலங்களில்)
- மேல் ஸ்தாயி வரிசைகள் - 05 (மூன்று காலங்களில்)
- தேவாரம் (திருஞானசம்பந்தர்) - 01
- இலகுவான பாடல் - 01 (தமிழ்ப்பாடல்)
    - இலக்கியப்பாடல், நாட்டார்பாடல், பக்திப்பாடல், இராகபாவமான பழைய திரையிசைப் பாடல் போன்றவை.

### அறிமுறை (வாய்மொழிப்பரீட்சை)

- ஸ்ருதி சேர்க்கும் ஸ்வரங்களின் பெயர்கள்
- சப்தஸ்வரங்களின் பெயர்கள்
- சங்கீத "பிதாமகரின்" பெயர்
- அப்பியாச வரிசைகள் அமைந்துள்ள இராகத்தின் பெயர்
- சுருதிக்குரிய வாத்தியத்தின் பெயர்கள் ( சுருதிப்பெட்டி, தம்பூரா )

## தரம் இரண்டு:

### செயன்முறை

- அகாரசாதகப் பயிற்சி வரிசைகள் (ஸ்வரவரிசை) - 02 ( மூன்று காலங்களில் )
- தாட்டு வரிசைகள் - 02 ( மூன்று காலங்களில் )
- அலங்காரங்கள் - 07 ( மூன்று காலங்களில் )
- சஞ்சாரி கீதங்கள் (இரு தமிழ்க்கீதங்கள்) - 03 ( இரண்டு காாலங்களில்)
- தேவாரம் (சுந்தரர்) - 01
- தேவாரம் (திருநாவுக்கரசர்) - 01
- சிறுவர் பாடல் - 01

### அறிமுறை (வாய்மொழிப் பரீட்சை)

- சப்ததாளங்களின் பெயர்கள்
- சப்ததாளத்தின் அங்க அடையாளங்கள்
- தாளத்தில் லகுவின் ஐந்து ஜாதிகளின் பெயர்கள்
- தாளவாத்தியம் ஒன்றின் பெயர்
- தேவாரம் இயற்றிய மூவரின் பெயர்கள்
- நாம் கற்கும் இசையின் பெயர்

## தரம் மூன்று:

### செயன்முறை

- லக்ஷண கீதம் - 01
- ஜதிஸ்வரம் - 01
- ஸ்வரஜதி - 01
- இலகுவான கீர்த்தனை - 02
- திருப்புகழ் - 01
- வெண்பா - 01

### அறிமுறை (எழுத்துத் தேர்வு)

- ஜனக இராகம் ஆரோகணம், அவரோகணம், ஸ்வரஸ்தானங்கள்
    - மாயாமாளவகௌளை
    - சங்கராபரணம்
- ஜன்னிய இராகம் இரண்டின் ஆரோகணம், அவரோகணம், ஸ்வரஸ்தானங்கள்
    - மோகனம்
    - பிலகரி
- மூன்று ஸ்தாயிகளின் பெயர்களும் குறியீடுகளும்
- பிரக்ருதி ஸ்வரங்களின் பெயர்கள்
- விக்ருதி ஸ்வரங்களின் பெயர்கள்
- அட்சரகாலக் குறியீடும், எண்ணிக்கையும்
- “சங்கீத பிதாமகர்” புரந்தரதாசரின் இசைத்தொண்டு
- ஆதி தாளம் - விளக்கம்
- இராகங்களின் ஆரோகண அவரோகணத்தை வரைபடமாக விளக்குதல்.
    - மாயாமாளவகௌளை,
    - சங்கராபரணம்,
    - மோகனம்,
    - பிலகரி
- சப்த தாளங்கள் லகுவின் ஐந்து ஜாதி பேதத்தால் 35 தாளங்கள்
    - ஆகும் விதம் பற்றிய அறிவு.

## தரம் நான்கு:

### செயன்முறை

- ஆதிதாள வர்ணம் (2 காலங்கள்) - 02
- கீர்த்தனைகள் (ஆதி, ரூபகம் - குறைந்தது மூன்று தமிழில்) - 05
- ஸ்வர சஞ்சாரம் பார்த்துப்பாடுதல் ஆதி, ரூபகம் (2 காலங்கள்) (மாயாமாளவகௌளை, சங்கராபரணம், பிலகஹரி, மோகனம்)
- கிராமிய இசைப்பாடல் அல்லது மெல்லிசைப்பாடல் - 01

### அறிமுறை (எழுத்துத் தேர்வு)

- ஜனக இராகங்கள் 72 பற்றிய அறிவு
    - சக்கரங்கள் 12 இன் பெயர்கள்
    - சுத்த மத்திம, பிரதி மத்திம இராக எண்ணிக்கை
    - இராகத்திற்கு இராகம் மாறும் சுரங்கள்
    - சக்கரத்துக்கு சக்கரம் மாறும் சுரங்கள்
    - வாதி, விவாதி சுரங்கள்
- தமிழிசை மூவர் பற்றிய சிறுவிளக்கம்
    - முத்துத்தாண்டவர்
    - அருணாசலக்கவிராஜர்
    - மாரிமுத்தாப்பிள்ளை
- ஜன்னிய இராகப் பிரிவுகளும் உதாரணங்களும்
- க்ரஹம் மூன்றினையும் உதாரணத்துடன் விளக்குதல்
- உருப்படிகளைப்பற்றிய சிறு விளக்கம்
    - கீதம் (சஞ்சாரி, லட்சண)
    - ஜதிஸ்வரம், ஸ்வரஜதி
    - தேவாரம், திருப்புகழ்
- யாழ்ப்பாணம் திரு. வீரமணிஐயர் அவர்களின் இசைத்தொண்டு

## தரம் ஐந்து:

### செயன்முறை

- நவராகமாலிகா வர்ணம் (2 காலங்கள்) - 01
- ஜம்பைதாளவர்ணம் (2 காலங்கள்) - 01
- கீர்த்தனை (சாபுதாளக் கீர்த்தனை 1, குறைந்தது நான்கு தமிழில்) - 08
- ஒரு கீர்த்தனைக்கு இராக ஆலாபனை செய்து கற்பனாஸ்வரம் பாட வேண்டும்
- பதம் - 01
- தில்லானா - 01

### அறிமுறை (எழுத்துத் தேர்வு)

- வர்ணங்களின் 4 பிரிவுகள்.
  - தானவர்ணம், பதவர்ணம் பற்றிய விளக்கம்.
- மும்மூர்த்திகள் பற்றிய அறிவு. இம் மூவரின் இசைத்தொண்டுகள்.
  - தியாகராஜ ஸ்வாமிகள்
  - முத்துஸ்வாமி தீட்சிதர்
  - சியாமா சாஸ்திரிகள்
- கீர்த்தனை, கிருதியின் விளக்கம்.
- கிராமியப்பாடல் அல்லது நாட்டார்பாடல். இவற்றின் தன்மை பற்றிய குறிப்புகள்.
- தமிழிசை பற்றிய ஒரு பார்வை.

## தரம் ஆறு:

### செயன்முறை

- அடதாளவர்ணம் (2 காலங்கள்) - 01
- பஞ்சரத்தினக்ருதி - 01
- க்ருதி, கீர்த்தனை (குறைந்தது ஆறு தமிழில், (சாபுதாளக் கீர்த்தனை - 1) - 10
- சௌக்ககாலக்ருதி (இராக ஆலாபனை, நிரவல், கற்பனைஸ்வரம் பாடுதல் - 01
- விருத்தம் (ஒரு இராகத்தில்)
- ஜாவளி - 01

### அறிமுறை (எழுத்துத் தேர்வு)

- இராக லட்சணங்கள் (முக்கிய விடயங்கள் மட்டும் போதும்.) ஆரோகண அவரோகணங்கள், ஸ்வரஸ்தானம் முக்கியம்.
  - நாட்டை
  - ஆரபி
  - கௌளை
  - பந்துவராளி
  - தோடி
  - கரஹரப்பிரியா

- சாபுதாளங்கள் பற்றி உதாரணத்துடன் சிறு விளக்கம்
- மனோதர்ம சங்கீதம் - அதன் முக்கியபிரிவுகளை விளக்குக.
- தசவித கமகங்கள் - கமகங்கள் சிறு குறிப்பு
- பக்க வாத்தியங்கள், பிரதான வாத்தியங்கள் என்பதன் விளக்கம்
  - வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், கடம், கெஞ்சிரா ஆகிய வாத்தியங்களின் படங்களை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். அவை பற்றிச் சிறிதாக அறிந்திருத்தல் வேண்டப்படுகிறது.

## தரம் ஏழு:

### செயன்முறை

- பஞ்சரத்தினக் க்ருதி - 02
- அடதாளவர்ணம் (2 காலங்கள்) - 01
- மற்றைய தரத்தில் இடம்பெறாத ஒருராக ஆலாபனை செய்தல்
- இராகம், தானம், பல்லவி (தமிழில் பல்லவி இருப்பது நல்லது) - 01
- தரப்படும் சிறிய சாகித்தியத்திற்கு இசையமைத்துத் தாளத்துடன் பாடிக் காட்டுதல்
- பதவர்ணம் (கீழ்க்காலம், மத்திமகாலம்) - 01
- அஷ்டபதி - 01
- இராகமாலிகாக்ருதி - 01
- தில்லானா - 02
- பஞ்சபுராணம்

### அறிமுறை (எழுத்துத் தேர்வு)

- ஒரு பாடலுக்கான இசையமைப்பில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்
- குரலுக்கான பயிற்சி செய்பவர்கள் கவனிக்கவேண்டிய விடயங்கள்
- விரலுக்கான பயிற்சி செய்பவர்கள் கவனிக்கவேண்டிய விடயங்கள்
- ஒரு மேடைக்கச்சேரிக்கான (அரங்கிசை) உருப்படிகளை எப்படி ஒழுங்கமைப்பதென்பதனைத் தெரிந்திருத்தல்.
- மேடைக்கச்சேரி சிறப்புற அமைவதற்குத் தேவையான முக்கிய காரணிகள்:
    - இசை, மண்டபம்
    - ஒலி, ஒளியமைப்பு
    - புரிந்துணரக்கூடிய பாடல்
    - இராக தாள ஒழுங்கு
    - ஸ்ருதி சுத்தம், லய சுத்தம்
    - பக்க வாத்தியம்

- இசை ஆசிரியரின் கடமையும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளும்
- கற்றுக்கொண்ட இச்சிறந்த நுண்கலையை வளர்த்து, எப்படிப் பல கலைஞர்களை உருவாக்கலாம் என்பதற்கான உங்கள் பங்களிப்பு எப்படி அமையும்
- மேலைத்தேய சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம், கர்நாடக சங்கீதம் மூன்றையும் பற்றிய விளக்கம்
- பாபநாசம் சிவன், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் ஆற்றிய இசைத்தொண்டு.

## ஆசிரியர் தரம்:

### அரங்கிசைக்கச்சேரி

இது ஒரு அரங்கிசை நிகழ்வு (45-60 நிமிடங்கள்). பாடல்களைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்துப் பாடமாக்கிப் பயிற்சி செய்து மேடைக்குச் செல்லுதல்

பாடல்கள் ஒழுங்கு அட்டவணை

- அட அல்லது ஆதி தாளவர்ணம் (இரண்டு காலங்களில்)
- விநாயகர் பாடல் ஹம்சத்வனி, நாட்டை, கம்பீரநாட்டை போன்ற இராகங்கள்
- கீர்த்தனை - ஆலாபனை செய்து நிரவல், கற்பனாஸ்வரம் பாடுதல் ( ஆதி அல்லது ரூபகம்)
- இராகம், தானம், பல்லவி திரிகாலம் பாடி, இரு காலம் கற்பனா ஸ்வரம் பாடி தீர்மானத்துடன் முடித்தல், விரும்பினால் இராகமாலிகை ஸ்வரம் பாடலாம்.
- விருத்தம்
- மெல்லிசைப்பாடல்
- தில்லானா
- திருப்புகழ்

### ஆற்றுகை. (கற்பித்தல்)

40 நிமிட வகுப்பு ஒன்றிற்கான பாட ஆயத்தமும், பாடம் நடாத்தும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும்.

### ஆய்வுக்கட்டுரை

- ஆய்வுக்கட்டுரை இருபத்தைந்து பக்கங்களிற்குக் குறையாது எழுதப்படல் வேண்டும். சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தினருடன் கலந்துரையாடி, கட்டுரையின் தலைப்பு மற்றும் உள்ளடக்கம் வேறோருவராலோ அல்லது வேறு நிறுவனத்தினாலோ ஆய்வுக்கு உட்படாத ஒன்றாக தெரிவு செய்தல் வேண்டும். உள்ளடக்கம் சுயமானதாக அமைதல் வேண்டும்.
- அண்ணளவாக பரீட்சைக்கு 6 மாதங்களிற்கு முன்பு சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தினருடன் கலந்துரையாடி கட்டுரையின் தலைப்பினைத் தெரிவெடுத்தல் வேண்டும்.
- ஆய்வுக்கட்டுரையை அறிமுகப்படுத்தத் தெரிந்திருப்பதுடன் பரீட்சைக்குழுவினரால் தொடுக்கப்படும் வினாக்களிற்குப் பதிலளிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**தகமைகள்**

- எட்டாவது தரத்துக்குத் தோற்றும் மாணவர் ஏழாவது தர எழுத்து, செயன்முறைத் தேர்வுகளில் சித்தி அடைந்திருப்பதுடன், வேறு ஏதாவதுதொரு நுண்கலையில் மூன்றாந்தரத்துக்குச் சமமான அறிவைப் பெற்றிருப்பதனை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
- அடிப்படைக்கல்வியான 10ஆவது தரத்தினை பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

*ஆசிரியர் பயிற்சித்தரமாக அமையும் இத்தரத்தை பூர்த்தி செய்யும் ஒரு மாணவர் சர்வதேசத் தமிழ் நுண்கலைப் படைப்பாற்றல் மையத்தின் பட்டத்தை பெறும் தகுதியை பெறுவதுடன் உரிய கலைப்பாடத்தினை மாணவ சமுதாயத்திற்குப் பயிற்றுவிக்கும் தகமையையும் அடைந்துகொள்கின்றார்.*

## இசை ஆசிரியர்களின் கவனத்திற்கு:

இசையுடன் தமிழையும் வளர்க்கும் நோக்கத்துடன் பாடாந்தர உருப்படிகள் கூடிய வரை தமிழிலும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மாணவர்களுடைய கற்பனைத்திறனை வெளிப்படுத்துவதற்கு உரிய பயிற்சி முறைகளை ஒவ்வொரு வகுப்பிலும் பழக்கப்படுதல் நன்று. உதாரணமாக குரல் பயிற்சி பாடுவதற்கு முன் எழுந்து நின்று உடலை அசைத்துப் பயிற்சி செய்து, ஒருவர் ஏதாவது ஒலியை எழுப்ப மற்றவர் அதனை அப்படியே பிரதி பண்ணி குரலோசை எழுப்புதல். வாத்தியம் வாசிப்போர் கூட இதே போன்று வாத்தியத்தில் பயிற்சிக்கலாம். ஏழுஸ்வரங்களும் மனித உடலில் பிறக்கும் இடங்கள் பற்றிய ஒரு விளக்கம்.

<u>வயதெல்லை விளக்கம்:</u>

இப்பிரிவானது ஒரு மாணவனின் இசைப்பிரவேசப் பிரிவாகும். இது மிகவும் முக்கியமானது. மாணவனின் ஆர்வத்தை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். எழுத, வாசிக்க, சொல்வதைப் புரிந்துகொள்ளக் கூடிய வயதாக இருத்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் புரிந்துணரும் பக்குவமுள்ள வயதாக இருத்தல் வேண்டும். மேலைத்தேய நாடுகளில் வாழும் சிறார்களின் சூழ்நிலை, காலநிலை, நேரப்பகிர்வுக்கேற்ப பல கலை ஆசிரியர்களின் அனுபவத்திற்கிணங்க ஆறு வயது பொருத்தமானது எனத் தீர்மானித்துள்ளோம்.

## மாணவரின் முன்னேற்றத்திற்கான அறிவுறுத்தல்கள்:

- ஒரு இசை வகுப்பிற்குக் காண்பித்து விளக்கக்கூடிய படங்களைச் சேகரித்து புகைப்படத்தொகுப்பு ஏட்டில் சேகரித்து வைத்தல். இசை நிகழ்வு, பிரபல பாடகர், வாத்தியக்காரர் போன்றவர்களின் படங்கள்.
- மேற்கொண்டு இசையில் தேர்ச்சி பெற வழிகாட்டும் சில குறிப்பு புத்தகங்களைத் தயாரித்தல்.
- இசைக்கூடங்கள், இசைப் பல்கலைக்கழகங்கள், இசைவிழா நடைபெறும் இடங்கள் பற்றிய விபரம் போன்றவற்றைச் சேகரித்து, குறித்து வைத்து,
- இசை வெளியீடுகள் ஒலிவட்டு, ஒளிவட்டு, காணொளி, கணினி போன்ற தகவற்தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் கேட்டு இரசித்துக் கேள்விஞானத்தை வளர்த்தல்.
- இசைப்போட்டிகள், இசை ஆராய்ச்சிகள், இசைப் புத்தகங்கள் , இசைச் சொற்பொழிவுகள் போன்றவை மிக்க அவசியம் என்பதை உணர்தல்.